www.tamilarangam.net

# அமரர் குமார் பொன்னம்பலம்

குமார் பொன்னம்பலம் அவர்களின் திடீர் மறைவு புலம்பெயர்ந்த தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. பிரபல ...ரிஞரும், அரசியல்வாதியுமான, அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் புதல்வராவார் குமார் பொன்னம்பலம், இலங்கை தமிழர் ...ல் வரலாற்றில் தனது தகப்பனாராது பிரபல்யமான பெயருடன் அறிமுகமாகிய குமார் பொன்னம்பலம், ஜனாதிபதி தேர்தல் முதல் ...ாளுமன்ற தேர்தல்வரை பல தேர்தல்களில் பங்கு கொண்டவராயினும், ஒரு தடவையெனும் வெற்றி கொள்ளமுடியவில்லை. ...ம்பில் இருந்து கொண்டு மனித உரிமைகளிற்காகவும், தமிழீழத்திற்காகவும் அண்மைக்காலமாக குரல் கொடுத்து வந்தார். ...ராது அரசியல் வரலாறு இன்னும் ஆழமானது!

...லும் தேர்தலும். . . .

...மார் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் சேகரித்து வைத்த சொத்திலும், செல்வாக்கிலும் அரசியலை பொழுது போக்காக எடுத்துக் ...டு தமிழ் அரசியல் உலகுக்கு அறிமுகமான அமரர் குமார், 77 பொது தேர்தலில் போட்டியிட யாழ்ப்பாண தொகுதி தமக்கு ...கவில்லை என்ற ஏமாற்றத்தில், தனி கட்சியாக போட்டியிட்டு ஒரு தொகுதியையும் கைப்பற்ற முடியாது அனைத்து தொகுதியிலும் ...வி கண்டார். அன்று கூட்டணி தலைவர்களும், இளைஞர்களும் ஒருமித்து நின்ற அந்த தேர்தலில் எதிர்பார்த்தபடி கூட்டணி ..., குமார் அவர்களது கட்சி மண்கவ்வியது. பின்னர் முதலாவது ஜனாதிபதி தேர்தலில், 1982ல் போட்டியிட்டுக் கொண்ட ...லும், தமிழ் மக்கள் மத்தியில் அது பெரிதாக எடுபடவில்லை. கோப்பாய் தொகுதியில் SLFP வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ ...க்கொண்ட வாக்குகளைவிட குறைவாகவே பெற்று எதிர்பார்த்த முடிவை தழுவிக்கொண்டார். தொடர்ந்தும் 1989, 1995ல் நடந்த ... தேர்தலில் போட்டியிட்டவராயினும் இதுவரை அவரோ அன்றி அவர் நிறுத்திய வேட்பாளரோ பாராளுமன்றம் செல்லக்கூடிய ...வை அவருக்கு இலங்கை தமிழ் மக்கள் வழங்கவில்லை. தமிழ் மக்களால் அரசியல் அநாதரவாக்கப்பட்ட அமரர் குமார் ...ாக 1995ல் தமிழீழத்திற்கு வெளியே நடந்த பொது தேர்தலில் கொழும்பில் போட்டியிட்டார். இத்தேர்தலில், கூட்டணி ...ளர்களை அக்கட்சியின் உதவியுடன், தனது தேர்தல் பட்டியலை நிரப்பி கொண்டு கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினராக ...காகு இடத்தை பிடிக்கலாம் என்ற முயற்சியில் இறங்கினார். அவரது, அந்த முயற்சியும் கைகூடாது போய்விட்டது. ...ிபிட்ட தேர்தலில் இவரது வேட்பாளர் பட்டியலை நிரப்புவதற்கு மறைந்த யாழ் நகர மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் ... பல பெயர்களை தமிழர் கூட்டணியிடம் தேர்தலுக்காக இரவல் பெற்றிருந்தார். இதேபோல் 89 பொது தேர்தலில் யாழ் ...டத்தில் இவரது கட்சி நிறுத்திய வேட்பாளர் சிவஞானத்தை புலிகள் சுட்டுக்கொன்றபோது போன வேகத்தில் கொழும்பு திரும்பின ... மீண்டும் யாழ் திருமபவில்லை என்பதை தமிழ் அரசியல் உலகு மறந்துவிடவில்லை.

...ரங்களிற்கு முன்னர் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுவேட்பாளரை நிறுத்த முன்னின்று உழைத்தவர் குமார் ...ள். வெளிநாடுகளில் கொழும்பு தமிழ் அமைப்புகள் அடிவருடிகள் என்று அடைமொழி கொடுக்கும் குமார், அதே கட்சிகளை ...ாக இணைத்து (தேர்தலுக்கு மட்டும்?) போட்டியிட முனைந்தபோதும், மாற்றுத் தமிழ்கட்சிகள் அண்ணன் குமாரிடமே, நீங்கள் ...பொருத்தமான வேட்பாளர் என்று வழமாக மாட்டிவிட, "கூட்டணி சிவா" வை வேட்பாளராக போடுங்கள் என்று கூறி விட்டு ...விட்டார். புலிகள் சம்மதம் தந்தால் தான் போட்டியிடுவேன் என்று இம்முறை ஜனாதிபதி தேர்தலை ஒதுங்கியிருந்து ஆசையில் ஒரு ...வ பார்த்தார். அவரது அறிவில், புலிகளின் பார்வை யாரில் விழுந்தாலும் காரியமில்லை, தன்னில் விளாக்கூடாது என்பதில் ...யாக இருந்தார். புலிகளின் அனுமதியின்றி, பிறர் தேர்தலில் நின்று ஆபத்திற்குள்ளாவது பற்றி அவர் அக்கறைப்பட்டவர் அல்ல.

...லான தேர்தல் எல்லாம் கேட்டு, தமிழ் மக்களும் கட்சிகளும் தனிமைப்படுத்திவிடவே நினைத்த M.P பதவியும் தூர தூர செல்ல, ...ள ஆதரிக்க வேண்டிய ஒரு கட்டாய நிலை ஏற்பட்டது. இவரின் நோக்கம்மாறிப்போன போக்கை, புலிகளும் அறியாமல் ...ல. புலிகளின் சர்வதேச பேச்சாளர் ஆக ஆசை இருந்தபோதிலும், அது புலிகளால் இறுதிவரை அங்கிகரிக்கப்படவும் இல்லை. ...ம், வெளிநாடுகளில் புலிகளின் ஆதரவு மேடையில் தன்னை அடையாளப்படுத்தி அபிமானம் தேடவும் குமார் தயங்கவில்லை. ...கொரு கட்சி, தன்னோடு இருவர், என அரசியல் கட்சி நடத்தியவருக்கு மற்றைய கட்சிகளைபோல எந்தவித நெருக்கடிகளும் ...கவில்லை. வெறும் அறிக்கை அரசியல்வாதியாக, தன்சேவைகளை பத்திரிகைகளைதேடி விளம்பரம் செய்து அவரும் கொழும்பு ...ாக- தனிமனித பவனி வந்தார்!

...ம்பில் மனிதஉரிமை மீறல்கள் என சிலருக்காக சட்டப்பிரதிநியாகவும் அவர் கடமையாற்றிய உண்மைகளும் இங்கு ...க்காட்டப்பட வேண்டும். இருப்பினும், அண்மையில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டதை, இன்னொரு தமிழ் மகனின் "கோர

www.tamilarangam.net

லை மரணம்" என்ற மரியாதை கூட வழங்க மறுத்திருந்தார். தமிழ் மனிதகுண்டில் இன்னொரு தமிழனை தமிழன் கொல... உரிமை மீறலாக அவர் கருதிக் கொண்டதில்லை. சிங்கள படைகளால் மீறப்படும் மனிதஉரிமை மீறலைப்பற்றியே அக்கறைப்படும் உரிமைவாதியும், சட்டத்தரணியும் அவர். நீலனின் மரணத்தை கண்டிக்கின்ற துணிவை தமிழ் மக்கள் அவரிடம் ர்க்கவில்லை, ஆனால் கொலைகளை நியாயப்படுத்தியாவது எழுதாது விட்டிருக்கலாம். ஆனால் குமார் பொன்னம்பலம் ங்களோ கொலைகளை நியாயப்படுத்திவந்த ஒரு மனிதஉரிமைகாரர்(?). அதை தவிர்த்திருந்தால் அவரது மனிதஉரிமை சேவைக்கு ம் ஒரு மரியாதை பெற்றிருப்பார். தனது முடிவும் அதேபோலத்தான் விரைவில் என்பதை அறியாது நடந்து கொண்ட குமார் ன்னம்பலம் அவர்களின் மரணமும் நீலன் திருச்செல்வம்போல் பாதை ஒரத்தில் அரசியல் வன்முறைக்கே இறுதியில் டப்பட்டுவிட்டது. அமரர் குமார் போல் அல்லாது, தமிழர்கள் நாம் அனைவரும் எம் தமிழர் கொலைகள் அனைத்தையும் யாக கண்டிப்போம்

னின் கொலையில் புலிகளின் குண்டுதாரியுடன் சேர்த்து இரண்டு தமிழர்களை தமிழ் உலகு இழந்தது. ன்று கொழும்பில் இருந்து, குறைந்தது கைது செய்யப்படுவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளை ஒரளவு செய்து வந்த குமார் ன்னம்பலமும் தமிழ் உலகின் இழப்புத்தான்.

வெளிநாடுகளில் வசதியாக வாழ்ந்து கொண்டு எமது உயிர், உடமை, பாட்டி, பாட்டான், என பலரை இங்கு பத்திரமாக த்துக்கொண்டு, எம்மண்ணில் கொலைகளை ஆதரிப்பதில் அர்த்தமில்லை. தமிழ் மகனை, கொலைசெய்து, தமிழ் மங்கையரை வைகள் ஆக்குவதையோ அன்றி தமிழ் மழலைகளை தாய்,தகப்பன் இன்றி ஆனாதைகள் ஆக்குவதையோ நிராகரிப்போம். வரால் அநாதைகளாக்கப்பட்டவர்களிற்கு புனர்வாழ்வுபணிகள் செய்வது யார்? புனர்வாழ்வு பணம் சேகரிப்பது யார்? தமிழீழம் என்ற ரில் புலிகளால் கொல்லப்பட்டு கொண்டிருக்கும் தமிழர்கள் என்றாலும் சரிதான், சிங்கள வீரவிதான என்றாலும் சரி தமிழர் லைகளை யார் செய்தாலும் நிராகரிப்போம்.

லூர் கந்தன் கருணையில் தமிழ் போராளிகள் படுகொலை. . .
னித உரிமைவாதி, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ராஜனி படுகொலை. . .
அமிர்தலிங்கம் படுகொலை. . .
புலிகளின் மாத்தையா படுகொலை. . .
நீலன் திருச்செல்வம் படுகொலை. . .
சென்ஜோன்ஸ் அதிபர் ஆனந்தராஜா படுகொலை. . .
புலிகளின் வதைமுகாமில் எழுத்தாளர் செல்வி படுகொலை. . .
யாழ் அரச அதிபர் பஞ்சலிங்கம் படுகொலை. . .
ராஜீவ்காந்தியுடன் பச்சை குழந்தைகள் படுகொலை. . .

ங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப தடையில்லை!
களின் வதைமுகாமால் எத்தனைபேர் வீடு திரும்ப முடியவில்லை! (உயிருடன்)

## ஜேர்மனிய கவிதை (நான் ஏன் என்று கேட்கவில்லை)

பாஸிஸ்ட்டுக்கள் கத்தோலிக்கர்களை கொன்றார்கள்
நான் கத்தோலிக்கன் அல்ல என்பதால் ஏன் என்று கேட்கவில்லை !
பாஸிஸ்ட்டுக்கள் புரட்டஸ்தாந்தவர்களை கொன்றார்கள்
நான் புரட்டஸ்தாந்தவன் அல்ல என்பதால் ஏன் என்று கேட்கவில்லை!
பாஸிஸ்ட்டுக்கள் சமூக ஜனநாயகவாதிகளை கொன்றார்கள்
நான் சமூக ஜனநாயகவாதி அல்ல என்பதால் ஏன் என்று கேட்கவில்லை!
பாஸிஸ்ட்டுக்கள் முதாலளிவர்க்கத்தை கொன்றார்கள்
நான் முதலாளிவர்க்கத்தவன் அல்ல என்பதால் ஏன் என்று கேட்கவில்லை!
பாஸிஸ்ட்டுக்கள் கம்யூனிஸ்ட்டுக்களை கொன்றார்கள்
நான் கம்யூனிஸ் அல்ல என்பதால் ஏன் என்று கேட்கவில்லை!
இறுதியில் பாசிஸ்ட்டுக்கள் என்னையே கொல்ல வந்தபோது ஏன் என்று கேட்பதற்கு யாருமே இருக்கவில்லை.

லங்கை தமிழ் மனித உரிமைகள் அமைப்பு
த்துவிட்டு பிறரிடம் கொடுக்கவும் / அனுப்பவும் ( FAX)